[2006 ஜனவரி 21

70—

கால்நடை மருத்துவமனை

***69635—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கோட்டேரியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி கோட்டேரியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 71, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.*

71—

கலங்கரை விளக்கங்கள்

***44823—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மற்றும் நீரோடி கலங்கரை விளக்கங்களைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மற்றும் நீரோடி கலங்கரை விளக்கங்களைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*